ஓம்

தருமசீலன்.

“ அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. ”

(All Rights Reserved.)

2 10444.

புத்தகம் 5	துந்துபிஸூ ஆவணிமீ 1922ஸூ ஆகஸ்டுமீ	சஞ்சிகை 5

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

முயற்சியால் பொருளீட்ட வேண்டுமெனல்.

“ இம்மியன நுண்பொருள்க ளீட்டிநீதி யாக்கிக்
கம்மியரு மூர்வர்களி றேறடைநுதல் சூட்டி
அம்மிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறஞ் சால்கென்
றும்மைவினை நொந்துபுலந் தாடலுணர் வன்றே.”

(இ-ள்) கூலிக்குப் பிறர்தொழிலைச் செய்யக்கூடியவர்களும், தங்களுக்குக் கிடைக்கும் இம்மியளவாகிய அற்பப்பொருள்களை நாடோறும் சிறிது சிறிதாகச் சேகரித்துப் பெரிய பொருளாக்கி, அந்தச் செல்வ மிகுதியினாலே, யானைமீதேறத்தக்க சிறப்படைந்து அக்களிற்றின் நெற்றியிலே, பட்டத்தைச் சூட்டி அதனை அலங்கரித்து. அதன்மேலேறிப் பவனி வருவார்கள். ஆதலின், கைப்பொருளற்றிருப்பவர்கள், உலகத்தில் உயர்ந்தோர் தாழ்வதையும், தாழ்ந்தோர் உயர்வதையும் பார்த்து, தண்ணீரில் அம்மி மிதந்து சுரை ஆழ்ந்து வீழ்ந்தது. இவற்றிற்குக்காரணம் அவரவர் செய்த அறத்தின் மிகுதியும் குறைவுமேயாம், மனிதரால் ஆவதொன்றில்லை; நாம் பொருளை அடையவேண்டுமானால் அறம்மிகுதியாகப் பொருந்தவேண்டும். நாம் பூர்வஜன்மத்தில் தருமஞ் செய்யவில்லை; அதனால் என்ன முயற்சிசெய்தாலும் நம்மிடத்தே பொருள் சேராது என்று முன் பழவினையை நொந்து முயற்சியை வெறுத்துக் கோபித்திருத்தல் அறிவன்று. கூடியவரை முயன்றால் அதற்குத் தக்கபயன் கிடைக்கும்” என்பதாம்.

(வி-ரை.) பொருளற்றிருப்போர், தக்க முயற்சிகளைச் செய்து சிறிது சிறிதாக வேனும் பொருளைச் சம்பாதிக்கவேண்டும்; எல்லாம் பழவினைப்படியே நடக்கும் என்று பேசாதிருத்தல் அறிவற்ற செய்கை என்பது இதன் கருத்தாம். ஆகவே ‘மக்களாயினோர் ஒவ்வொருவரும் பொருளைத் தேடுதற்கு முயற்சியுடையவர்களாகவே யிருக்கவேண்டு’ மென்பது இதனாற் ‘பெறப்படும். இம்மி-எண்ணிற் குறைந்ததோர் அளவு; மத்தங்காய்ப் புல்லரிசியுமாம்; இஃது அற்பத்தைக் குறிக்கும். கம்மியர்-பிறர்தொழில் செய்வார். “அம்மி மிதந்து ஆழ்ந்து சுரை வீழ்ந்தது” என்பது எடுத்துக்காட்டு; உயர்ந்தோர் வாழாதே தாழ்ந்தோர் வாழ்ந்ததனைக் குறிக்கும். ‘சால்கென்று’ என்பதில் அகரந் தொக்கது.

(சீவகசிந்தாமணி-495)

தருமசீலன்.

துந்துபிவரு ஆவணிமீ.

"கீழோராயினுந் தாழவுரை"

இதன் பொருள்:—"(உன்னை எதிர்ப்படுவோர்) கீழோர் ஆயினும்-கீழ்மக்களாயிருந்தாலும், (அவர்களிடத்தே பேசும்போது) தாழ-உன் மனம் பணிவுற, (அதாவது: வணக்கமாக), உரை- பேசு", என்பதாம்.

கீழ்மக்களானவர்களிடத்தும் பணிவாக இனிய மொழிகளையே பேசவேண்டுமென்பது இதன் கருத்தாம். பொறுமைமிக்க உயர்ந்த மனிதர்களிடத்தே கடினமொழிகளைப் பேசிவரின் அவர்களும் ஒருசமயத்தில் விரோதங்கொண்டு கெடுதிகளைச் செய்ய ஆரம்பித்துவிடுவர். அங்ஙன மிருப்ப, கீழ்மக்களிடத்தில் கடினமொழி பேசினாலோ அவர்களால் அளவற்ற கேடுவிளையுமென்பது சொல்லவேவேண்டியதில்லை. அவர்களிடம் சிறிது கடினமாகப் பேசினும் அவர் விரோதங் கொள்வர். இனிமையாகப் பேசினாலோ மிக்க நன்மைகளையே புரிவர். மேலும், பணிவும் இன்சொற் கூறுதலும் மேன்மக்கள் குணங்களாம்.

> "பணிவுடைய னின்சொல னாத லொருவற்
> கணியல்ல மற்றுப் பிற"

என்றார் திருக்குறளாசிரியரும். ஆதலின், ஔவைப்பிராட்டியாரும் இங்ஙனம் நீதிகூறினர். இந்நீதியைக் கடைப்பிடித்து எல்லோரும் எவ்விடத்தும் இனிய மொழியே பேசப் பழக வேண்டும்.

(திருவருட்சகாயம்.)

"க்ஷத்ர சூடாமணி."

(முன்தொடர்ச்சி-புத்தகம். 5. சஞ்சிகை-4-பக்கம்-83.)

கந்தருவதத்தையாரிலம்பகம்.

இஃதிங்ஙனமாக, "பத்மாஸ்யன்" கோவிந்தை யையும், "ஜீவகன்" வீரலக்ஷ்மியையும் மணந்து மகிழ்ந்திருக்கையில், நடந்த விஷயம் கூறப்படுகின்றது.

"ஸ்ரீதத்தன்" என்ற ஓர் வைசியன் அந்த இராஜமாபுரியில் வசித்து வந்தான். அவன் வியாபாரஞ் செய்து மிகுந்த பொருளை யிழந்துவிட்டான். அதனால் அவன் மீண்டும் பொருளைச் சேர்ப்பதற்கு விருப்பங் கொண்டான். பொருளாசை எவருக்குத்தான் ஏற்படாது? பின்பு அவன் பொருளைப் பெறுவதற்கு முயற்சியே காரணமென்றும் பொருளால் இன்பம் ஏற்படும் என்றும் சிந்தித்தான். பிராணிகளுக்கு இகலோக சுகோபாயத்தில் சிந்தை எளிதிலேயே ஏற்படுமன்றோ? பெற்றோரால் சம்பாதிக்கப்பட்ட பொருள் அதிகமாயிருக்கட்டும்; ஆயினும் அதனால் பயனென்ன? பிறர் கொடுத்த பொருளைப் புசித்துக்கொண்டிருப்பது முயற்சியுள்ளவனுக்குப் பிடிக்காததல்லவா? அதனால் அவ் வணிகன் "பொருளானது வருவாயின்றிச் செலவோடிருப்பின், மிகுதியாயிருந்தாலும் அழிவுறும். எப்பொழுதும் எடுத்துக்கொண்டிருந்தால் மலையும் மறையுமன்றோ? பிராணிகளுக்கு வறுமையினும் கொடியது வேறொன்றில்லை.

> "தாங்கொணு வறுமை வந்தால்,
> சபைதனிற் செல்வ நாணும்;
> வேற்கைபோல் வீரங் குன்றும்;
> விருந்தினர்க் காணில் நாணும்;
> பூங்கொடி மனையாட் கஞ்சும்;
> புல்லருக் கிணங்கச் செய்யும்;
> ஓங்கிய வறிவு குன்றும்;
> உலகெலாம் பழிக்குந் தானே."

பொருளற்றவர் நடைப்பிணமே யாவர். "பணமில்லாதவன் பிணம்" என்பது பழமொழி யன்றோ? வறுமை யுற்றவனுக்குக் கொண்டாடத்தக்க குணமும் பிரகாசிப்பதில்லை. பலவாறுரைப்பானேன்? அந்தோ! அவனிடம் கல்வி நிரம்பியிருந்தும் விளங்குவதில்லை. தரித்திரன் வறுமையினால் வஞ்சிக்கப்பட்டு எக்காரியத்தையும் செய்ய

வல்லமையற்றவனுப் செல்வரின் முகத்தைக் கருத்தோடு பார்க்கின்றான். ஆகலின் எவ்வாற்றானும் முயற்சித்துப் பொருளைப் பெற வேண்டும். மனிதர் பொருளைப் பெற்றதற்கு நல்லோரைக்காத்தலே பயனாகும். கனிகளைக் காகத்திற்களிக்கும் வேம்பும் மாமரம்போல மெச்சப் படுவதில்லை. (நல்லோரிடம் பயனைக் கொடாமையினாலென்க.) இம்மை மறுமைகளில் ஹிதகரமான பொருளும் தீயோருக்கு நன்மை யளிப்பதில்லை; ஆற்றுநீரானது உவர்க்கடலிற் சேர்ந்தால் வீணே யாகின்றதல்லவா?" என்றிவ்வாறு சிந்தித்துத் தன் கப்பலில் பலசாக்குகளை நிரப்பிக்கொண்டு வியாபாரத்திற்காகப் பிரயாணமானான். பொருளை விரும்புவோன் கடலை மாத்திரந்தானா தாண்டுவான்? அவ் வணிகன் வேறு தீவுக்குச்சென்று ஆங்குள்ள அரசனைக் காணிக்கை கொடுத்துக் கண்டு, அவன் அநுமதிபெற்று அங்கே வியாபாரஞ் செய்து ஏராளமாகப் பொருளைச் சம்பாதித்துக் கொண்டு மீண்டும் கப்பலேறித் திரும்பினான். பிராணிகளுக்குப் பொருள் சேருவதற்குரிய காரணத்தைக் கண்டுபிடிக்க வியலுமோ? பின்னர் அவன் கப்பல் வழியாய்த் தன்தேசத்திற்குச் சமீபம் வந்து சேர்ந்தான். அப்பொழுது புசலுடன் பெருமழை பெய்தது. அதனால் கப்பல் கம்பமடைந்தது. ஆபத்துக் காலத்தை அறியவல்லவர் எவர்? கப்பலிலுள்ள ஜனங்கள் யாவரும் கப்பல் கடலில் அழுங்குவதற்கு முந்தியே துன்பக்கடலில் மூழ்கிவிட்டனர். அவ்விதம் மூழ்கியது, மரக்கலம் மூழ்கியபிறகு ஏற்படப்போகிற துன்பத்திற்குத் திருஷ்டாந்தமாயிற்று. தத்துவமுணர்ந்த கப்பல் வியாபாரியாகிய 'ஸ்ரீதத்த'னே யாதொரு மாறுதலையையும் அடையவில்லை. துக்க காலத்தில் இருவரும் விகாரமடைந்தால் அறிந்தவனுக்கும் அறியாதவனுக்கும் வேற்றுமை இராதல்லவா? பின்பு வியாபாரி சிறிதும் மனச்சோர்வடையாமல் மரக்கலத்திலுள்ளவர்களைப் பார்த்து அப்பொழுது பின்வருமாறு போதிக்கலானான்: மெய்யறிவானது பிராணிகளுக்கு இம்மையிலும் மறுமையிலும் சுகத்தையே அளிக்குமன்றோ?

"நண்பர்களான அறிஞர்களே! வரப்போகிற ஆபத்தைக் குறித்து நீங்கள் வருந்துகிறீர்களே! நீங்கள் வீணே வருந்துவதால் பயனென்ன? பாம்பிடம் பயப்படுகிறவர்கள் பாம்பின் வாயில் கையை வைப்பார்களா? ஆபத்துவரின் அஞ்சாதிருப்பதே தகுதியாகும். துக்கிப்பது சரியன்று; தத்துவமுணர்ந்தவர்களுக்கு அஞ்

சாமை ஏற்படும்; ஆதலின், அறிஞர்களே! நீங்கள் தத்துவ ஞானிகளாக ஆகவேண்டும்." என்றான்.

இதற்கிடையில் மரக்கலம் மூழ்கவே அதன் பாய்மரம் முறிந்து மிதந்தது. ஆயுள் இருந்தால் பிராணிகளின் உயிரை எவரேனும் காப்பரன்றோ? உடனே ஸ்ரீதத்தன் முறிந்த பாய்மரத்தைப் பிடித்துக்கொண்டு மிதக்கவே, அலைகள் அவனை ஓர் தீவில் தள்ளிக் கொண்டுபோய்ச் சேர்த்தன. உயிரைப்பெற்ற பிராணியானவன் அரசை இழந்தாலும் மகிழ்வானன்றோ? 'ஸ்ரீதத்தன்' தான் கொண்டுவந்த பொருட்குவியலை யெல்லாம் இழந்திருந்தும் துக்கிக்காமல் சந்தோஷத்துடன் பின்வருமாறு சிந்திக்கலானான்: தத்துவ ஞானமாகும் பொருளிருப்பின், சுகமும் துக்கமும் மயக்கத்தை உண்டாக்காதன்றோ?

"ஏ மூடாத்மாவே! நீ திருஷ்ணையென்ற தீயால் தகிக்கப்பட்டு வீணே மயக்க முறுகின்றனை; இம்மை மறுமைகளில் நன்மையைக் கெடுக்கின்ற திருஷ்ணைக்கும் கோபத்திற்கும் பேதமேயில்லை. ஹே! ஆத்மாவே! நீ இரண்டுலகங்களிலும் நன்மை பெறுவதற்காக ஒழிவை அடைவாயாக; ஆசையானது கருமத்தையும் ஸௌக்கியத்தையும் கெடுக்கின்றது. ஆத்மாவே! நீ 'ஸம்ஸாரம் ஸாரமற்றது' என்பதை இப்பொழுது கண்டுகொண்டாய்; ஏனெனில் நீ எதையோ ஆரம்பித்தாய்; பயனோ வேறுவிதம் ஏற்பட்டது. அதனாற்றான் யோகிகள் இந்திர பதவியையும் தள்ளிவிட்டு முக்தியின் பொருட்டுத் தவத்தைச் செய்கின்றனர். அவர்களுக்கு நமஸ்காரம்." என்று யோசித்தான்.

இவ்விதம் சிந்தித்த 'ஸ்ரீதத்தன்' அவ்விடம் யதிருச்சையாகக் காணப்பட்ட ஒரு புருஷனிடம் தனக்கு நேர்ந்த கஷ்டத்தைக் கூறினான். யோகிகளுக்கும் மோகம் நீங்கும்வரை சாபல்யம் உண்டாகுமன்றோ? தற்செயலாய் வந்தவன்போல் காணப்பட்ட அப்புருஷனும் வியாபாரி கூறியதைக் கவனத்துடன் கேட்டான். பிறவியில் வியவகாரமெல்லாம் கபடமின்றி இரா. அப்புருஷன் பிறகு வியாபாரியைக் கபடமாய் வெள்ளிமலைக்கு அழைத்துச் சென்று, தான்வந்த காரணத்தையும் அவனுக்குக் கூறலானான் :—

"நண்பனே! தென்திசைக்கு அணிகலமாகிய இவ்வெள்ளிமலையில் "நித்யாலோகம்" என்றொரு நாடு உளது; அந்நாட்டில் "கருடவேகன்" என்ற அரசன் வசிக்கின்றான், அவனுக்கு "தாரிணி"

210646

என்ற பட்டமகிஷியும் "கந்தருவதத்தை" என்ற பெண்ணும் இருக்கின்றனர். அப்பெண் யௌவனப் பருவமுள்ளவள்; நற்குண நற்செய்கைகளுள்ளவள்; அவள் பிறந்தபோது சோதிடர்கள் "இவள் 'இராஜமாபுரி'யில் வீணையினால் தன்னை வெல்லுகின்றவனுக்கே வாழ்க்கைப்படுவாள்" என்று கூறினார்கள். அதற்காக அரசன் இராணியுடன் தனிமையில் யோசித்துப் பிறகு என்னிடம் மகிழ்ச்சியுடன் "நண்ப! எனக்கு இராஜமாபுரியிலுள்ள ஸ்ரீதத்தனிடம் குலக்கிரமமாய் நட்பு ஏற்பட்டிருக்கிறது; ஆதலால் நீ விரைந்து சென்று அவனை அழைத்துவா?" என்று சொன்னார். "தர" னென்று பெயருள்ள நான் காரியத்தின் நிமித்தியால் மரக்கலம் மூழ்கியது போல் தோற்றுவித்து உன்னை இங்கே அழைத்து வந்தேன்." என்று கூறினான்.

இதனைக் கேட்ட "ஸ்ரீதத்த"னும் மிக்க மகிழ்வுற்றான். பிராணிகளுக்குத் துன்பத்திற்குப் பின் ஏற்படும் இன்பம் அதிகமன்றோ? வியாபாரி வித்தியாதரனைப் பார்த்ததால் சந்தோஷ மடைந்தான். அரசனை நண்பனாகப் பெற்றவனைக்காட்டிலும் உலகில் சுகியார்? பின்பு வித்தியாதரன் 'கந்தருவதத்தை'யை அழைத்துவந்து "நண்ப! நீ 'இராஜமாபுரி'யில் இவளை வீணை வித்தையில் வெல்பவனுக்கு விவாகஞ் செய்துகொடு!" என்று கூறி 'ஸ்ரீதத்த'னிடம் அவளை ஒப்புவித்தான். நண்பனிடம் உயிரையும் ஒப்புவிக்கலாமல்லவா? பின்பு 'வித்தியாதரன்' ஸ்ரீதத்தனை அங்கிருந்து விரைவாகக் கிளப்பிவிட்டான். பெண் யுவதியாயிருந்தால், விவாகஞ் செய்ய விளம்பம் கூடாதல்லவா? கிருகஸ்தர்களுக்குக் கன்னிகையை விவாகஞ்செய்து கொடுக்காமல் வீட்டிலேயே வைத்துக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டமல்லவா? "ஸ்ரீதத்தன்" அவளை அழைத்துக் கொண்டு "இராஜமாபுரம்" வந்து சேர்ந்து அவள் வரலாற்றை மனைவியிடம் கூறினான்.

பிறகு "ஸ்ரீதத்தன்" 'காஷ்டாங்கார'னிடஞ் சென்று அரசரே! என்னிடம் ஒருபெண் இருக்கிறாள்; அவள் "கருடவேகன்" மகள். அவள் வீணை வாசிப்பதில் வல்லவள்; அவள்தந்தை வீணையில் வெல்பவனுக்கே அவளைக்கொடுக்கவேண்டுமென்று சொன்னார். நானும் அதற்கிசைந்தேன்; தாங்கள் இதற்கு அனுமதி தரவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அவனும் அதற்குச் சம்மதித்தான்.

பிறகு 'ஸ்ரீதத்தன்' இவ்விஷயத்தை 'தண்டோரா' மூலமாய் நகரமெங்கும் பிரசித்தப் படுத்தினன். இதைக்கேட்ட நகரத்தாரனைவரும் பல வேந்தர்களும் குறித்ததினத்தில் வீணைவாசிக்கும் மண்டபம் வந்து சேர்ந்தனர். உலகில் பெண்களிடம் ஆசைகொள்ளாதவர் உண்டோ? அவ்விடம் உயரிய ஆஸனத்தில் 'காந்தருவதத்தை' அமர்ந்து வீணையை மீட்டிச் செவிக்கின்பமாகப் பாடினாள். உடனே ஆங்கு அசுணப்பறவைகள் வந்து பூமியில் விழுந்தன. சபையோர் ஆனந்தமடைந்தனர். பிறகு அரசர்கள் ஒவ்வொருவராகப்பாடவே அசுணப்பறவைகள் பறந்தோடிப்போயின. இவ்வாறு அரசர்கள் யாவரும் வீணைவாசிப்பதில் தோல்வியடைந்தனர். நிறைவுறாத கல்வியானது அவமானத்தையே தருமன்றோ? பின்பு 'ஜீவகன்' அவ்விடஞ்சென்று வீணையை மீட்டிப்பாடினான். அசுணப்பறவைகள் மீண்டும் வந்தன. சபையோர் ஆனந்தமடைந்தனர். அதனால் அவன் அவளை வீணையில் வென்றான். நிறைந்த கல்வியானது இம்மை மறுமைகளில் நன்மையளிக்குமன்றோ? 'கந்தருவதத்தை'யும் ஜீவகனிடம் தோல்வியுற்றதை வெற்றியிலும் சிறந்ததாக எண்ணினாள். புண்ணியஞ்செய்தவரின் சமீபத்தைத் திருமகளே தேடியடைகின்றாளல்லவா? பிறகு அப்பெண் "யாவரும் இவரைக் கணவராகப் பெறுவதற்குத் தவஞ்செய்யுங்கள்" என்று சொல்லுகின்றவள்போல ஜீவகனுடைய கழுத்தில மாலையைச் சூட்டினாள்.

அப்பொழுது 'காஷ்டாங்காரன்' ஜீவகனைக் கொல்வதற்கு இது தான் சமயமென்று தீர்மானித்து அங்குள்ள வேந்தர்களைப் பார்த்து, "அரசர்களே! மகாபராக்கிரமம் பொருந்திய நீங்களெல்லோருமிருக்கையில் மட்டச் சரக்குகளை வியாபாரஞ் செய்யும் ஓர் செட்டி மகன் இராஜ கன்னிகையைக் கவர்ந்துகொண்டு போகிறானே! இது உங்களுக்கெல்லாம் அவமானமல்லவா? உயர்ந்த பொருளைப் பெறுவதற்கு உரியவன் அரசனே யன்றோ? ஆதலால் நீங்களெல்லோரும் அவனோடு போர்புரிந்து அவனைக்கொன்று அக்கன்னிகையைப் பெற வேண்டும்" என்று போதித்தான். பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமைகொள்வது தீயோர் செய்கையன்றோ ?

இவ்விதம் "காஷ்டாங்காரன்" கூறவே அரசர்கள் யாவரும் வீராவேசத்துடன் 'ஜீவக'னை எதிர்க்கத் தொடங்கினர். இயற்கையிலேயே மாந்தர் மனம் தீச்செயலிற் செல்லும்; தீயபழக்கமும் ஏற்பட்டால் தீவழியிற் செல்லத் தடையென்ன? பின்பு இருதிறத்துப்

போர் வீரர்களும் வீராவேசத்துடன் போர்புரிந்தனர். உடனே 'ஜீவகன்' கூரிய அம்புகளால் பல அரசர்களின் சிரங்களைக் கொய்து வெற்றி பெற்றான். "ஆயிரங்காக்கைக்கு ஒரு கல்லே" போதுமன்றோ? அப்பொழுது நல்லோர்கள் "கன்னிகையின் மனம் தக்கவிடத்தில் பதிந்தது; உலகில் சந்திரனிடமிருந்து அமிருதம் உண்டாவது ஆச்சரியமாகுமோ? 'ஜீவக'னைப் போல மகாவீரன் ஒருவனுமில்லை. 'காஷ்டாங்கார'னுடைய துர்ப்புத்திக்குத் தக்கபயன் வந்தது' என்று கூறினார்கள். பிறகு 'ஜீவகன்' முதலியோர் 'ஸ்ரீதத்தன்' மாளிகைக்குச் சென்றனர். அங்கே 'ஸ்ரீதத்தன்' 'கந்தருவதத்தை'யை அக்னி சாக்ஷியாக ஜீவகனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். அங்கே 'ஜீவக'னுக்கு விதிப்படி விவாகம் மிக்கவிமரிசையாய் நடைபெற்றது.

(மூன்றாவது கந்தருவதத்தையா ரிலம்பகம் முடிந்தது.)

(தொடரும்.)

By M. M. Narayanaswamy Aiyar,
Mudikandan, P. O.

"நமது பெருங்குறை."

எந்நாட்டினும், நன்றாகவும், முன்றாகவும், தற்காலம் கருதப்படும் இங்கிலாந்து தேசத்திலே, பெண்பாடசாலைகள் அபரிமிதமாய் இருக்கின்றன. அத்தேசத்திலே யுள்ளார் ஆண்மக்களைக் கல்விபயில அனுப்புகின்றவாறு, பெண்மக்களையும், யாதொரு பேதமும் பாராட்டாது கல்விபயில அனுப்புகின்றனர். கல்வி என்ற விஷயத்தில், ஆண் மக்களுக்கிருக்கும் சகல சுதந்தரத்தையும், பெண்மக்களுக்கும் அளிக்கிறார்கள். அப்பெண்மணிகளும், படித்து முன்னேறின பிறகு, அவர்கள், தாய்மாராகும் காலத்து, அவர்கள் பிள்ளைகளுக்குக் கல்வியின் கண்ணியத்தை அமுதூட்டும் அமயத்திலும், மற்றும் சந்தர்ப்பமான சமயத்திலும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல், எடுத்துரைத்து, நமது பாட்டியாராகிய ஔவைப்பிராட்டியாருடைய, அருமை வாக்காம் "இளமையிற் கல்வி, சிலையில் எழுத்து" என்ற நன்மொழியை நாட்டிவிடுகிறார்கள். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பது நமது நாட்டில் வழங்கும் சாதாரணபழமொழி. பிள்ளைகள் கல்விகற்கும் பருவம்,

இளமைப் பருவம். பிள்ளைகள் தங்களது இளமைப்பருவத்தைத் தாய்மார் சார்பாகவே கழிப்பார்கள். அச்சமயம் தாய் கற்றதாயா யிருந்தால், நாம் மேற்கூறியவாறு, பிள்ளைகளுக்குக் கல்வியின் பெருமையை எடுத்துக்கூறி அப்பிள்ளையினது நோக்கங்களைக் கல்வியிலேயே செல்லவிடுவாள். ஆண்பிள்ளைக்காயினும், பெண்பிள்ளைக்காயினும், கல்விக்குக் காரணமாய், முன்னிற்பது தாயாரே இங்கிலாந்து தேசத்திலே ஏறக்குறைய, எல்லாப் பெண்மக்களும் வாசித்திருக்கிறார்கள். அவர்கள் காரணமாக இங்கிலாந்து தேசமே, கல்வி நிரம்பிய நாடாய்விட்டது. கல்வி யுபாக் காரியங்களெல்லாம் நல்லனவாகும். ஆகப் பெண் கல்வியாலேயேதான், இங்கிலாந்து தேசமானது சிறுதேசமானாலும், அறிவிற் சிறந்த தேசமாகி, இவ்வுலகத்தையே ஆளுந்திறமைகொண்டு, போற்றல் புரிந்துகொண்டு வருகிறது. இப்படியிருந்தும் இம்முழு உலகத்திலே விளையும், ஒவ்வொரு தாவரவர்க்கங்களும் விளையும் நாடாகவும், சுத்தவீரர்களும், சத்தியம் தவறாத அரிச்சந்திரன் போன்ற அநேக மன்னர்களும், ஸ்ரீராமரைப்போலவும், பூருவைப்போலவும், பிதுர்வாக்கிய பரிபாலனம் செய்த, சற்புத்திர அரசிளங் குமாரர்களும், உலவிய நாடாயும், அரைக் காசுக்கும், அற்ப விநாடி சுகத்துக்கும், இச்சைப்பட்டு, இழக்கப்பட்ட கற்பானது பின்னர் இலக்ஷம் பொன் கொடுத்தாலும்வராது, என்ற உண்மையை உணர்ந்து, தங்களொழுக்கம் தவறாது, உஜ்ஜீவித்த பதிவ்ரதைகளும், இவ்வுடம்பை நீரிற்குமிழிக் கொப்பாகவும், புழுக்குரம்பையாகவும், காற்றடைக்கப்பட்ட துருத்திக் கொப்பாகவும், ஆய்ந்துணர்ந்து,

"கட்டி யணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மாம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டால்,
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகியப்பா
லெட்டி யடிவைப்ப ரோஇறை வாகச்சி யேகம்பனே"

என்ற இராஜ சந்நியாசினது வாக்கையும், ஊன்றிக் கவனித்து, தன்னையே வெறுத்துப் பின்னர், இல்லறத்தைத் துறந்து, துறவறத்தைப் பூண்டு, ஒழுகிநின்ற சந்நியாசிகளும், அபரிமிதமாக வாழ்ந்த நாடாகவும் விளங்கிய நமது இந்தியாவிலே, தற்காலத்தின், துரதிஷ்டவசத்தினால், இத்தகைய தேச க்ஷேமவிருத்திக்கான விஷயங்களைக் கவனியாமல், விளக்கைக்கண்டு மருண்டு, பெரும்பொருளென மதித்து, அதில் விழுந்திறக்கும், விட்டில்களைப் போன்று,

நமக்கல்லாத அந்நியநாட்டு ஆசாரத்தில் மூழ்கி, தட்டுக் கெட்டுத் தடுமாறி நிற்கும், அநேகம் குடும்பங்களை நாம் பார்க்கலாம்.

உதாரணமாக: அரைமீசை வைப்பது அநாகரீகமென உணராது, அதுவே உல்லாசமென்றெண்ணி, அலைந்துழலும் அநேக நண்பரை நாம் கண்கூடாகக் காணலாம். சில வெள்ளறிவினர் இருபது முப்பது ரூபாய் செலவழித்து "Cooling glass" என்ற நாமத்தையுடைய, கண்ணைக் குருடாக்கும், கண்ணாடியை, அதுவே, நாகரீகமும், அழகும் என்பதாக நினைத்து நல்ல கண்ணைக் கொண்டுள்ளவர்கள்கூட வாங்கி உல்லாசமாக அணிந்து, பின்பு, சின்னாட் சென்றவுடன், அக்கண்ணாடி யன்னியில், பார்க்க முடியாதவர்களாகிறார்கள்; விழிகண் குருடராய் முடிகிறார்கள்; முடவன் தனது கைக் கோலைத் தேடுகின்றவாறு, அவர்களும் பின்னர், கண்ணாடி கண்ணாடி, என்று அலைகின்றார்கள். சனியனை விலைக்கு வாங்குவாரைப் போல, தன்னெஞ்சத்தையே கொளுத்தப் புகைபிடிக்க ஒன்றரை முழம் சுருட்டை வாயில் வைத்துக் கொண்டு உலவும் நண்பர்கள் அநேகரை நாம் காணலாம். ஆக அசட்டுக் கொள்கையையடைய, நம்மவர் முயற்சிக்கிறார்களேயன்றி, நல்லவழியில், நாட்டங்கொள்வார் மிகச்சொற்பமாகவே இருக்கின்றார்கள். எப்படிப் பன்னாடையானது, தன்னகத்தில் விடப்படும் பதனீரைக் கீழே யொழுக விட்டு விட்டுப் புழு பூச்சிகளைக் கொள்ளுகிறதோ, அப்படியே, மேற்குறித்தவர்கள் கெட்டதைக் கொண்டு நல்லதைக் கைநழுவ விடுகிறார்கள். இதனால், நாம் முன்னர் விவரித்துள்ளவாறு, நமது ஆசாரங்களெல்லாம், மறைந்துகொண்டிருக்கின்றன. அந்நிய நாட்டு ஆசாரங்களானவை, காட்டுத் தீப்போல், பரவிக்கொண் டிருக்கின்றன. இங்கிலையில், குற்றங்களை நீக்கிக் குணத்தைக் கொள்வதுதான், பெரியாரது துணிபு; மேல்நாட்டார் கொள்கைகளில் நமக்காகாததைத்தள்ளி ஆவதையே கைக்கொள்ள வேண்டும். அவர்களுடைய மற்ற கொள்கைகளைத் தள்ளிப் பெண்கல்வியைப் பற்றி மட்டும் அது, நல்லதா? கெட்டதா? என்பதை, நாம் ஏன் யோசிக்கப்படாது? எவ்வழியில் நின்று யோசித்தபோதிலும், பெண்கல்வியானது, நமது நாட்டிற்கு மிக அவசியம் என்பது வெள்ளிடைமலை போலவும், உள்ளங்கை நெல்லிக்கனிபோலவும் விளங்கும். இத்தகைய விஷயங்களைப்பற்றி உள்ளதை நாம் வெளியே கூறப்போனால், எண்ணிறந்த அசட்டுக் கேள்விகளைச் சிலர் கேட்டு

காத்தழும்பேறி அலைகின்றனர்: "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? எனச் சில வெண்டலையர் வினவுகின்றனர். இது, புத்தியை விலைக்குவிற்ற வெற்றுடம்போர் கேள்வி. இவர்கள் இதைவிட்டு, தன்தாரம் அருகிலிருக்க, அக்கினி சாட்சியாக நீயே எனக்கு உயிர் என்பதாகப் பலபெரியோர் முன் சத்தியம் செய்து கொடுத்த மனைவிபக்கலில் இருக்க, பரஸ்திரீகளை, பார்த்தவர்களை யெல்லாம் பதியாகக் கொள்ளும் நாரிகளை நாடியலையும், சில ஆடவர்களுக்கு உயிர் எதற்கு?, என்பதாகக் கேள்வி கேட்கப்படாதோ? அக்கேள்விக்கு இக்கேள்வி எவ்வளவோ உயர்ந்ததாயிற்றே. எவர் வாயிலிருந்தும் சட்டென்று வெளிவரும் இத்தகைய கேள்விகளைப் பற்றியும், பெண்கல்வியின் பெருமையைப் பற்றியும் அடுத்த பத்திரிகையில் ஆராய்ந்தெழுதுவோம்.

(இன்னும் வரும்.)

மு. பே. மாரியப்ப நாடார்.
18, தெற்குக் காட்டன் ரோடு
தூத்துக்குடி.

கொல்லாமை.

ஸ்ரீ ஸுராஸுர நதீதெசம் ஸ்ரேஷ்டஷ்ரீவல்லபம் ।
காருண்யஜலதிம் தேவம் தேவாதிவ நமாம்ஸதம் ॥

தேவேந்திரர்களால் வணங்கப்பட்டவரும், மோக்ஷலக்ஷ்மி நாயகராகவும், கருணைக்கடலாகவும் விளங்குபவரும், அந்தரங்க பஹிரங்க லக்ஷ்மி ஸம்பத்துடன் கூடியவருமான ஸ்ரீவீரவர்த்தமான தீர்த்தங்கர பகவானை நான் எடுத்தகாரியம் இனிது முடிதற்கு நமஸ்கரிக்கிறேன்.

கொல்லாமை யென்பது, இல்லறத்தார்க்குரிய எண்வகை நற்குணங்களில் முதன்மையானது. இது, யாதொரு ஜீவனையும் கொல்லாதிருத்தல், தொந்தரவு செய்யாதிருத்தல் எனப்பொருள் படும். உலகத்திலுள்ள உயிர்கள்யாவும் சுகத்தைவிரும்பிக் கஷ்டத்தை வெறுப்பது இயல்பே. ஆகையால் எந்த உயிருக்கும் யாதொரு தீங்கிழைக்கா திருத்தலும், நன்மையையே புரிதலும், கஷ்டப்படும் ஜீவன்களிடத்தில் மனமுருகி அவைகளின் கஷ்டத்தை விலக்கி வைத்தலும் ஜீவகாருண்யமாகும்.

மானிடர் ஸாதிக்கவேண்டிய புருஷார்த்தங்கள் நான்கினுள் முதலாவதாகிய அறத்தைக் கொண்டுதான், மற்றைய மூன்றுமாகிய பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடையமுடியும். வீட்டின்பம், முடிவற்றதாகவும் யாதொரு குறைவற்றதாகவும் இருப்பது பற்றி, அதை இச்சியாதார் உலகில் இல்லை. அப்பெற்றிய வீட்டின்பத்திற்கு முதன்மையானகாரணம் அறமேயாகும். ஆனால் இவ்வறத்திற்கு வித்து ஜீவகாருண்யமே தவிர வேறில்லை. இதுபற்றியே, மஹிமைதங்கிய ஸ்ரீ ஆசார்ய பரமபுருஷர்கள், 'சாரித்ரபக்தி' அதாவது நல்லொழுக்கப் பிரபந்தத்தில்,

𑌧𑌰𑍍𑌮𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌪𑌰𑌃 𑌸𑍁𑌹𑍃𑌦𑍍𑌭𑌵𑌭𑍃𑌤𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌮𑍂𑌲𑌂 𑌦𑌯𑌾 ।
𑌧𑌰𑍍𑌮𑍇 𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌹𑌂 𑌦𑌧𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌂 𑌹𑍇 𑌧𑌰𑍍𑌮 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌲𑌯 ॥

" 'தயை'யே மூலகாரணமாகவுடைய, உத்பத்திஸ்தானமாகவுடைய, தர்மமே! ஸம்ஸாரி ஜீவன்கட்கு, உன்னையல்லால் உண்மையான சிநேகிதன் வேறு ஒருவரும் இல்லை. ஆகையால் நான், எப்பொழுதும் உன்னிடத்திலே என்மனதை ஸ்தாபிக்கிறேன். அது காரணத்தால், நீயே என்னை ஆதரிப்பாயாக" என்று அருளியிருக்கின்றனர்.

" 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌅𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌵𑌧𑌃 ।
𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌸𑍁𑌖𑌂 ॥ "

"கொல்லாமையே உத்தமமான தர்மம். பிராணிகளுடைய வதையே அதர்மமாகும். அதர்மத்தினின்றும், விலங்குகதி, நரககதி முதலான கீழ்மையான ஜன்ம பிராப்தியாகும். ஸ்வதர்மமாகிய நல்லதர்மமாகிய, உத்தமதர்மமாகிய அஹிம்ஸா தர்மத்தினின்று முடிவற்ற ஸ்திரமான மோக்ஷசுகம் உத்பவிக்கும்" என்பது இந்தியர்கட்கு ஸஹஜமான நீதி மொழியாகும். பௌத்தமதத்தின் ஸ்தாபகராகிய கௌதமபுத்தர் யாகங்களைக் கண்டித்து 'ஜீவதயையே' தர்மமென்று உபதேசித்திருக்கிறார். கிறிஸ்தவமதமும், மஹம்மதிய மதமும் கூட 'கொல்லாதிருப்பாயாக' என்று நன்கு கற்பிக்கின்றன.

மேற்கண்டவாறு, மஹான்கள் ஹிம்ஸையைக் கண்டித்தும், அஹிம்ஸையைச் சிறப்பித்தும் கூறவேண்டிய காரணங்களில் சிலவற்றைக் கீழே கூறுவாம்:—

1. நாம் பிறரிடம் எதை எதிர்பார்க்கிறோமோ அதையே நாமும் பிறருக்குச் செய்யவேண்டும். பிறர் நம்மிடத்தில் எவ்வாறு

நடந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிறோமோ, அவ்வாறே நாமும் பிறரிடத்தில் நடந்து கொள்ளவேண்டும். நாம் எப்பொழுதும் சுகத்தை விரும்புகிறோமேயொழிய, துக்கத்தை விரும்புவதில்லை. ஆகையால், நாம் எந்த ஜீவனுக்கும் நன்மையே புரிந்து, கொஞ்சமேனும் தீமைபுரியாமல் இருத்தல் வேண்டும். நாம் பிறருக்கு நன்மைசெய்தால்தான், அவர்களிடமும் நன்மையை எதிர்பார்க்க நமக்கு பாத்தியமுண்டு. ஆயினும் நன்மையை எதிர்பாராமல் பிறருக்கு நன்மை செய்வதே மஹாமேன்மையானதாகும்.

2. "தன்னுயிர்க்கின்னாமை தானறிவானென்கொலோ, மன்னுயிர்க் கின்னாசெயல்" என்று ஸ்ரீ ஹலாசார்யர் திருக்குறளில் அருளியபடி, நமக்கு எந்தவிஷயம் கெடுதிபயக்குமோ அவ்விஷயம் பிறஜீவன்கட்கும் கெடுதிபயக்கும் என்பதை நாம் அறிந்திருந்தும், பிறஜீவன்கட்கு என்ன காரணத்தாலோ துன்பத்தை விளைவிப்பது? அப்படிச்செய்வது மிகுந்த கொடுமையாகாதா?

3. உலகம், இப்போது இருப்பதைவிட எத்தனையோ பங்கு அதிக ஜீவன்கட்கும் இருக்க வசதியளிக்கும்படி, அவ்வளவு அதிவிசாலமாக இருக்கிறது. அப்படியிருக்கையில, இருக்கவிடமில்லாமல் தவிப்பதுபோல், வாயில்லாப்பிராணிகளைப் பரலோகமனுப்புவது மஹாபாதகமாகாதா?

4. ஒரு உயிரை உற்பத்திசெய்யச் சாமர்த்தியமில்லாத ஒருவன் பிற உயிரைவதைப்பதில் என்ன பாத்யதைபெறுவான்? ஸாமர்த்தியம் இருப்பினும் கூட வதைப்பது அகர்மமேயாகும். ஏனெனில், அழிப்பதற்குப்பதிலாக உத்பத்தி செய்யாமல் இருப்பது மிக்க நலம் அல்லவா?

5. தன் பிள்ளைக்குச் சாப்பாடு, ஆடையாபரணாதிகள், படிப்பு முதலானவைகளைக் கொடுத்து, அவனை ஆதரிக்கிற காரணத்தால், அப்பிள்ளையைக் கண்டிப்பதற்குத் தகப்பனுக்கு பாத்தியம் இருக்கிறது. அன்னியனாகிய ஒருவனுக்கு இவ்விஷயத்தில் பாத்யம் உண்டாகுமா? அதுபோலவே பிறஜீவன்கட்கு நன்மைபுரியாத ஒருவன் அவற்றைக் கண்டிக்க எங்ஙனம் பாத்யதை பெறுவான்?

6. ஜகத் ஸிருஷ்டியில் நம்பிக்கை யுள்ளவர் விஷயமாக எல்லாவற்றையும் படைத்த ஈஸ்வரன் ஒவ்வொரு ஜீவனையும் யாதானும் ஓர் காரணார்த்தமாகவே படைத்திருக்க வேண்டும். அப்படியிருக்க,

அவருடைய மனோபாவம் அறியாமல் ஜீவன்களை, வதைசெய்வது பொருத்தமாகுமோ?

7. தன் பிள்ளைகளிடத்தில் பக்ஷபாதமன்னியில் அன்பு செலுத்தும் ஒரு தகப்பன், மூத்தவர்கள் இளையவர்களை அடித்தால், மனம் ஸஹிப்பானோ? சகோதரர்கள் குறும்புசெய்தால், தகப்பனிடம் சொல்வது முறையாகுமே யல்லாது, தாங்களே பதில் தீங்கு செய்தல் பொருந்தாது. அதுபோலவே, மேற்குலத்தாராகிய மனிதர், ஸர்ப்பாதிகளால் நேரிடும் பாதைகளை நிவாரிக்குமாறு ஈஸ்வரனைக் குறித்து முறையிடுவதல்லாமல், அவற்றை வதைத்து மீளுதல் சுலபமென்று, 'தான்' என்னும் ஆண்மைபால் அவற்றை உயிர்போக்கிவிட்டால், யாவற்றையும் நிஷ்பக்ஷபாதமாய் பாாமரிக்கும் புருஷோத்தமனுக்கும் மனம் ஸஹிக்குமா? அவன் வெறுப்புறும் காரியத்தைச் செய்துவிட்டு, அவனிடம் நன்மையை எதிர்பார்க்கக் கொஞ்சமேனும் இயலுமா?

8. ஒவ்வொரு ஜீவனும், அதனதன் கர்மாநுஸாரமாக ஜன்மித்து, அந்த அந்தப் பிறப்பு பூர்த்தியாகும் பர்யந்தம், மனோவாக்காதி வியாபாரத்தால், அதனதன் சக்திக்குத் தக்கவாறு, யாதானும் ஒருவழியில் முயற்சியைச் செலுத்தி வருகின்றது. அவ்வாறிருக்க, ஒருஜீவனை அதன் மனோரதத்தில் தடையிட்டு மற்றோர் ஜன்மாவுக்கு அனுப்புவது ஞாயமாகுமா?

9. ஒருவன் உயிருள்ளவரைக்கும் செல்வம் முதலானவற்றால் உண்டாகும் சுகத்தை அனுபவிக்கக்கூடும்; உயிர்போன பிறகு, அவனுடைய பொருள்களெல்லாம் அவனுக்குப் பயன்படாமல் போகின்றன. ஆகையால், எந்த ஐஸ்வரியத்துக்கும் மேலானது உயிரேயாகும். சுகத்திற்கு மூலகர்த்தா உயிரேயாகும். ஒருவன் தன் சொத்துமுழுதும் இழந்துவிட்டாலும், யாதானும் ஒருதொழிலை மனோதைர்யத்தால் கைக்கொண்டு ஜீவிக்கலாம். உயிரே போனபிறகு, எப்பொருள் இருந்து யாதுபயனாகும்? ஆகையால், ஒருஉயிரைக் கோறல், திருட்டுமுதலான எப்பாதகத்தைக் காட்டிலும் கணக்கற்ற மடங்கு கொடுமையான பாதகமாகும்?

10. நெல் விதைத்தால் நெல் விளையும்; எட்டிவிதைக்க நெல் விளையுமோ? அதுபோல், பிறருக்கு நன்மை செய்தால், நமக்கும் நன்மையே உண்டாகும். பிறருக்குக் கெடுதிசெய்தால், நமக்கும் கெடுதி அவசியம் உண்டாகும். ஒரு விதை விதைத்தால், அதி

னின்று அதிகமான தானியம் விளைவதுபோல், பிறருக்கு ஒரு நன்மை செய்வோமானால், அதற்கு அதிகமானநன்மையும், ஒரு,கெடுதி செய்வோமானால் கணக்கற்ற கெடுதிகளும் நமக்கு விளைவது திண்ணம்.

11. அறிவாளிகளும் வலியோர்களும் அறிவில்லாதவரையும் எளியோரையும் தாழ்ந்தவைகளையும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களே யொழிய, அவர்களையோ அவைகளையோ வதைக்கக் கடமைப்பட்டவர்களல்ல. ஆகையால், அவ்வாறு வதைத்தால், அது அழகாகுமோ? நியாயமாகுமோ? கொடும்பாதகமாகாதோ?

12. மனிதர்கட்கு யாதானும் ஓர் ஆபத்து நேரிட்டால், பிறரிடத்தில் சொல்லி விடுவித்துக்கொள்ளும் நன்மை அவர்கட்கு உண்டு. மிருகங்களுக்குத் துன்பம் நேரிடின் அவைகட்கு அவ்வாறு தப்பித்துக்கொள்ள வழியாதொன்றும் இல்லை. அவைகள் அநாதைகளாய் இருக்கின்றன. அவைகள் கட்சியை எடுத்தும்பேசுவார் உலகில் யார் உளர்? ஆனால் தெய்வம் அவைகள் கட்சியை எடுத்துக் கொள்ளாமல இருப்பதில்லை. சில சமயங்களில் கண்ணுக்குக் கண்ணாகவும, சில சமயங்களில், பிற்காலத்திலோ பிறிதொரு ஜன்மத்திலோ அத்தீங்கினர், அவற்றால தெய்வ உதவிகொண்டு பிரதித்தீங்கு இழைக்கப்படுகிறார்கள். பிறரிடம் சொல்லித் தங்களை விடுவித்துக் கொள்ளும் சாமர்த்திய மில்லாததால், மிருகங்கட்குப் பிரகிருதி தேவியால், கொம்புகள், கூர்மையான விஷப்பற்கள், கூர்மையான நகங்கள் முதலானவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் அவைகள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளவேண்டியவைகளாயிருக்கின்றன. அப்படியாயினும் எப்பெற்றிய கொடிய ஜந்துவும், தனக்கு அபாயம் நேரிடும் என்ற பயத்தினால் மானிடருக்குத் தொந்திரவு செய்யக்கூடுமே யொழிய, கெட்ட எண்ணத்தினால் அல்ல. பாம்பைக்கண்டு நாம் எவ்வாறு பயப்படுகிறோமோ, அது போலவே, அதுவும் நம்மைக்கண்டு பயப்படுகிறது. அநேகர் ஒன்று கூடி ஒரு பாம்பை மடக்கும்பொழுது அதுபடும் துன்பம், பகவானன்றி யார் அறிவார்? விதிப்பயனின்றி ஒரு காரியமும் நடவாது. நாம் பாம்புகள் இல்லாதவிடத்தில் இல்லை. அப்படியிருந்தும், பாம்புகள் நம்மை எப்போதும் கடித்துக்கொண்டு இருக்கின்றனவா? ஆகையால் அவற்றை அடித்துக்கொல்வதால், யாதுபயன்? மஹத்தாகிய பாபத்தைக் கட்டிக் கொள்ளுகிறோமே யொழிய வேறொன்றும்

இல்லை. விதிவந்தால், எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலும் ஆபத்திற்குள்ளாகத்தான்வேண்டும். உண்மையாகவே நாம் ஜீவன்களிடத்தில் தயையோடு கூடியிருந்தால், நாம் வழிபடும் தெய்வத்தைக் குறித்து உருக்கமாய்ப் பிரார்த்தித்துக்கொண்டோமானால் நமக்கு நிச்சயமாக யாதொரு தீங்கும் நேரிடாது. இப்பெற்றிய காலங்களில், ஜைனர்கள் ஸ்ரீதரணேந்திரனை உருக்கமாகஸ்மரிக்கிறார்கள். இப்படிச் செய்வதற்கு தைர்யமில்லாதவர்கள், தங்கட்கும், அவைகட்கும் யாதொரு துன்பம் நேரிடாத வழியாக நடந்துகொள்ளக்கூடும். அதாவது, பாம்பு, தேள், எலி முதலான ஜந்துக்களை, குறடு, பொறிமுதலானவைகள் மூலமாகப் பிடித்து, ஜனசஞ்சாரமில்லாத தூரப்பிரதேசங்களில் கொண்டுபோய் விட்டுவிடலாம். இப்படிச் செய்வதாவது, பகவானுக்குக் கொஞ்சமாகிலும் சம்மதப்படும். துன்பத்தினின்றுவிலக, யாதொருவழியும் இல்லாததுபோல் பிற உயிரை, மிகவும் அல்பமாக எண்ணி அதைக்கோறல் இப்பிறப்பிலும், மறுபிறப்பிலும் பெரிதான துன்பங்கட்கு வித்திட்டதாகும்.

16. 'எறும்பு, புழு, பேன், மூட்டைப்பூச்சிகளையும் கூட கொல்லக்கூடாதாம்' என்றுசொல்லி, அறிவாளிகள் நகைக்கும்படியான காலமாய் இருக்கிறது ஓ ஓ. அப்பெற்றியவர்கள் 'கவ்பர்' 'Cowper' என்னும் மேல்நாட்டுக்கவியின் நீதிமொழியைச் சற்று கவனிக்கட்டும். இக்கவி சொல்வதாவது: 'எவ்வுயிரையேனும், எவ்வளவு நுட்பமாயிருப்பினும், அது சிறு புழுவாயிருந்தாலுங்கூட அதைமிக்க அல்பமாகவும், உயிரற்றதுபோலும் பாவித்து, அதன்மேல் மிதித்து நடக்கிறவன் யாவனாயினும், அவனை நான் என்சிநேகிதன் என்று சொல்லமுடியாது. ஏனெனில், எவ்வளவு நுட்பமான ஜந்துவாயிருப்பினும் அதற்கும் சுகதுக்கம் என்பதுண்டு.' இது நிற்க நாமே சற்றுயோசித்துப் பார்ப்போம். புழுக்கள் நிறைந்துள்ள நிலங்களில் பயிர்கள் செழிப்பாய் விளையவேண்டிய காரணமென்ன? அவைகள் தங்கள் சக்திக்குத் தக்கவாறு பூமியின் மண்ணைக் கீழ் மேலாகப்புரட்டி நமக்கு உதவிபுரியவில்லையா? எறும்புகள், 'எப்போதும் சுறுசுறுப்பாயிருங்கள், 'காற்றுள்ளபோதே தூற்றுங்கள்' என்றும் மேலான நீதிகளை, பார்ப்பவர்கள் யாவருக்கும் தங்கள் செய்கையால் காட்டுகின்றன. நன்மைக்குப்பதில் தீமைசெய்வதும் அழகாமோ? நியாயமாகுமோ? நாமும்சுத்தமாகஇருந்துகொண்டு, ஆடைபடுக்கை முதலானவைகளையும் சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தால் எவ்வாறு பேன், மூட்டைப்பூச்சிகள் உத்பத்தியாகும்? அப்படியே எற்

பட்டாலுங்கூட, அவற்றை ஹிம்ஸிக்காமல் நிழலில்எடுத்து எறிந்து விட்டால் நமக்குவந்தகெடுதிஎன்ன? வெளியில் போட்டுவிட்டால், இறந்துபோய்விடுமே என்றால் அதற்குஏற்பட்டுள்ள அல்பஆயுஷ்யத்தையும்நாமும் துரிதப்படுத்தவேண்டுமோ? குதர்க்கபுத்தியினால், பல்வேறு ஜீவன்களையும் வதைசெய்பவர்களைக்கண்டு, அவர்கள் அனுபவிக்கப்போகும் கஷ்டங்களை எண்ணித் தயங்குவ தல்லாமல் நாம் வேறு என்னசெய்யமுடியும்.

(தொடரும்)

ஸ்ரீ. ஜ்வாலினீ பாலகன்.

பாலபோத விளக்கம்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-5, சஞ்சிகை-4, பக்கம்-88.)

74. ஒருவன் ஏழையாயிருந்தாலும் தான் கலியாணஞ்செய்த மனைவியுடன், சுயேச்சையாயிருந்து, ஜீவனத்திற்கான ஏதேனுமொரு தொழிலைச்செய்து பொருள்தேடிக் குடும்பத்தை நடத்த வேண்டும். மாமியார்வீடு ஐசுவரிய முடையதாயிருந்தபோதிலும், மாமியார் மாமனார் தங்கள் குடும்பத்துடன் சேர்ந்திருக்கச் சொல்லி வற்புறுத்தினாலும் அக்குடும்பத்தில் மனைவியுடன் சேர்ந்திருக்கலாகாது. அப்படியிருப்பது மகா இழிவாம். மாப்பிள்ளை அவ்வீட்டாரால் அடிமைபோல் நடத்தப்படுவான். மனைவியும் அவனை மதிக்கமாட்டாள், அவன் ஆயுளெல்லாம் நடைப்பிணமாய்த் திரிவான்.

75 மாமியார்வீட்டுக்கு அதிகச்சொத்திருந்து வார்சில்லாமற் போனபோதிலும், மருமகன் அந்தச்செல்வம் மனைவிக்குரியதென்று நினைத்து அதனைப் பாதுகாத்து வைக்கவேண்டுமே தவிர, நல்ல சமயம் வாய்த்ததென்று தன்னுடைய சொந்தத் தொழிலையும் விட்டு மனைவியுடன் போய் மாமியார் வீட்டில் குடியிருந்து கொண்டு அந்தச் சொத்துக்களை வீண்செலவு செய்து கொண்டு ஜமீன்தார் குழந்தையைப்போல் திரியலாகாது. அவ்வாறு திரிந்தால் அவன் கொஞ்சகாலத்தில் தரித்திரனாய்க் கஷ்டப்பட்டு உலகத்தவரால் அவமதிக்கப்படுவான்.

76. தன்குடும்பத்திற்குத் தகுந்த நற்குண நற்செய்கையுள்ள பெண் ஏழையாயிருந்தாலும் அழகற்றவளாயிருந்தாலும், கஷ்டமில்லாமல் ஜீவிக்கவேண்டிய மனிதன் அவளையே மணஞ்செய்து கொள்

ளவேண்டும். பெண்வீடு செல்வவந்தர் வீடாயிருக்கிறதென்றாவது, அதிகப்பணங் கிடைக்குமென்னும் ஆசையினாலாவது, பெண் அழகாயிருக்கிறாளென்றாவது நினைத்துக் குடும்பத்திற்காகாத துர்க்குணப் பேய்களைக் கட்டிக் கொள்ளலாகாது. அந்தப் பிடாரிகளைத் தாலி கட்டிக்கொண்டால் ஆயுள்வரை அவஸ்தையே உண்டாகும்.

77. மாப்பிள்ளை வீட்டிலுள்ள சொத்துக்களை நாளடைவில் வறட்டிவிடும் குடும்பங்களிலுள்ள பெண்களை எப்பொழுதும் மணஞ் செய்து கொள்ளலாகாது. அவ்வாறு மணஞ்செய்து கொண்டால் மாப்பிள்ளை எவ்வளவு செல்வவந்தனாயிருந்தாலும் வெகு சீக்கிரம் ஓட்டாண்டியாகி விடுவான்.

78. ஒருவன் தன் மனைவியைப் பெற்றவளாகிய தன்மாமியாரையாவது, மனைவியுடன் பிறந்த சகோதரர்களையாவது, மனைவிக்கு அக்காள் தங்கைமார்களையாவது வீட்டில் சேர்த்து வைத்திருக்கலாகாது. அவ்வாறு சேர்த்து வைத்திருந்தால் மனைவி, செருக்கடைந்து குடும்பக்காரியங்களைச் சரிவரக் கவனிக்கமாட்டாள். சதா அவர்களுக்குதவி செய்வதிலேயே புத்தியைச் செலுத்திக் கொண்டு அவர்கள் விஷயத்தில் குடும்பச் சொத்துக்களை இரகசியமாய் வீண் செலவு செய்யத்தொடங்குவாள். அதனால் குடும்பம் கெட்டுப் போகும். தவறுகண்டு புருஷன் கண்டித்துப் பேசும்பொழுதெல்லாம் அவள் அடங்காமல் எதிர்த்தே பேசத்தொடங்குவாள். குடும்பத்தில் இடைவிடாத சச்சரவுகளே உண்டாய்க் கொண்டிருக்கும்.

79. ஒரு குடும்பத்தில் மனைவி சொல்லையே எப்பொழுதும் கேட்டு நடப்பவன் மனிதரிற் பதராவான். அவள் சொற்களில் நல்லவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும்; கெட்டவற்றைத் தள்ளி விடவேண்டும். பெண்கள், இயற்கையில் பேதைமைக் குணமுடையவர்களாதலின், எவ்வளவு படித்தவர்களாயிருந்தபோதிலும், எவ்வளவு விவேகிகளா யிருந்தபோதிலும் அடிக்கடி அவர்களிடம் அறியாமைகுணம் நிகழ்ந்துவிடும். ஆதலின், அவர்களுடைய எல்லா வார்த்தைகளையும் நம்பி நடப்பார்க்கு நிச்சயமாக ஒவ்வொரு சமயத்தில் தீங்குண்டாகிவிடும்.

(தொடரும்)

சற்குரு.

தருமோபதேசம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-4, பக்கம்-86)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஏதேனு மொருதொழிலைச் செய்து நஷ்ட
 மெய்திபொரு வன்வருந்தி யிருக்கும் போது
காதேற வவன்தெளியு மார்க்கந் தன்னைக்
 கருணையொடு புகலாமல் கடின மாகச்
சீதேவி யுன்னைவிட்டுத் தொலைந்தாள் நீயும்
 தெரியாம லிவற்றையெல்லாஞ் செய்வ தாலே
தீதேதான் வருமென்று செப்பி யன்னோன்
 செய்தொழிலைக் கெடுப்பவரே கொடிய ரம்மா. (௭௬)

காரியத்திற் கவசியமாம் பொருளை யந்தக்
 காலத்திற் றவறாமல் சேர்ப்பே னென்று
வீரியமா கப்பேசி யச்ச டங்கை
 விரும்பியே செய்வோரை நம்பச் செய்து
பேரிடிதான் விழுந்ததுபோற் சமயத் திற்குப்
 பேசியவா றப்பொருளைக் கொடுபோ காமல்
காரியத்தைக் கெடுத்தவரைக் கதற வைப்போன்
 காசினியிற் கடைப்பட்ட கழுதை யாமே. (௭௭)

ஒருகுடும்பத் தொட்டிலே யிருந்து வேண்டும்
 உதவிபல பெற்றுமிக விருத்தி யாகிப்
பெருகுசெல்வம் பெற்றபின்னர் முற்கா லத்திற்
 பேருதவி செய்தவரைப் பேணி டாமல்
உருகியிவ ரெனக்கென்ன செய்துவிட்டார்
 உழைத்துழைத்து நானல்லோ பொருளைச் சேர்த்தேன்
விருதாவி லிவர்பெருமை யடைந்தா ரென்றே
 விண்டிடுவோன் நன்றிகெட்ட மிருக மாமே. (௭௮)

செம்பையார்.

நீதிவாக்கியங்கள்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5. சஞ்சிகை-4. பக்கம்-9.)

55-நீ கல்வியில் தேர்ந்த ஒரேஆசிரிய னிடத்தில் கல்விகற்றுக் கொள். பலஆசிரியர்களிடத்தில் ஓடித்திரியாதே; ஒருநூலைப்பாட மாக எடுத்தால் முற்றுறப்படி. அரைகுறையாகப் பலபுத்தகங்களைப் படிக்காதே. அவ்வாறு படிப்பதால் கற்றறிமோழையாய் விடுவாயே தவிர எதிலும்தேர்ந்த ஞானமடையமாட்டாய்.

56. எந்தப்பாஷையைப் படித்தபோதிலும் எழுத்துத் தப்பில் லாமல் எழுதவும் படிக்கவுமாவது கற்றுக்கொள். இவ்விதம் கற்கா மல் நீ எவ்வளவு படித்த போதிலும் படிக்காதவனேயாவாய்.

57. நீஎவ்வளவு படித்திருந்தபோதிலும் படிக்காதவனைப்போல வே பாவனைசெய்து கொண்டிரு. அகங்காரங்கொண்டு படிப்பில் எனக்குமிஞ்சினவன் இல்லையென்று படிப்பாளிகளை அவமதித்துத் தற்பெருமைபேசாதே. சாதாரணப்படிப்பாளிகளிடத்திலும் பணி வாயிரு. அவர்களால் எழுதப்படும் புஸ்தகங்களையாவது மற்றவை களையாவது அவமதித்துப் பேசாதே. அவற்றிலும் நமக்குத்தெரி யாதவிஷயங்கள் இருக்குமென்று ஒவ்வொன்றையும் கவனித்துப் பாரு. அங்ஙனம்பார்ப்பதால், மேலும்மேலும் நூதனமான பற்பல விஷயங்களைக் கற்றுக்கொண்டு பெரியவித்வானுய் விடுவாய்.

58. இலக்கணத்தோடுசேர்ந்த கல்விப்பயிற்சி உன்னிடத்தில் இல்லாதிருக்கும்போது புத்தகம்எழுதவாவது பத்திரிகைநடத்த வாவது ஆரம்பித்துவிடாதே. ஒருசமயம் நீபூரண படிப்பில்லாதிருக் கும்போது தெய்வச்செயலால்உனக் கந்தப்பதவிகள் ஏற்பட்டபோதி லும், தந்திரமாக இருந்து அக்காரியங்களை நடத்திக்கொண்டிரு; கற்றவர்எழுதும்விஷயங்களில் குற்றம்சொல்லவும் திருத்தவும் ஆரம் பித்துவிடாதே. அவ்வாறுசெய்தால் குணத்தைக் குற்றமாக்கிய பிழை உன்தலைமீதேறிக்கொள்ளும்; கற்றாரும்மற்றாரும் உன்புத்தி யைக்குறித்து மெத்தவுஞ்சிரிப்பர்.

59. ஒருவரிடத்தில் ஒருவிஷயத்தைத் தெரிந்துகொண்டால், 'நான் இன்னவரிடத்தில் இன்னவிஷயத்தைக் கற்றுக்கொண்டேன்', என்றுபலரிடத்தும் சொல்லி அவர்க்கெப்பொழுதும் நன்றிசெலுத் திக்கொண்டேயிரு.

60. ஒருவிஷயத்தைக் கற்றுக்கொடுத்த ஆசிரியன்பெயரை வெளிமேபகூறினல் தனக்குமதிப்புக் குறையுமென்று நினைப்பவன் மகா மூடனுவான்; ஒருபோதும்கல்வியில் விருத்தியடையமாட்டான். எருமைமாட்டுக்கும் அவனுக்கும் பேதமேயில்லை. அவனெந்நாளும் ஈடேறவேமாட்டான்.

61. ஒருவரிடத்தில் ஒருவிஷயத்தைக் கற்றுக்கொண்டு, வெளியில், அவருக்குத் தானே அவ்விஷயத்தைக் கற்றுக் கொடுத்ததாகக் கூறித் தற்பெருமைபடைவோன் மகாசண்டாள னுவான், இவனுடைய விரைந்தவரவை எரிவாய்நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.

62. ஒருவர், அருமையாக மிகப்பிரயாசையுடன் செய்து முடித்தகாரியத்தை அவர் பெயர்தெரியாத விடங்களிற்சென்று, தானே செய்துமுடித்ததாகச் சொல்லித் தற்பெருமை யடையும்மனிதன் சண்டிக்கழுதைக் கொப்பாவான். வெகுசீக்கிரம் இவனுடைய புரட்டு வெளிப்பட்டுக் கண்டவரெல்லாம் இவன்முகத்தில் காறியுமிழ்வார்கள். இவன் வீண்பெருமையடைய நினைத்ததற்குப் பிரதிபலன் இதுவேயாகும்.

63. நன்றிசெய்தோரிடத்தே விசுவாசமின்றி அவர்களுடைய காரியங்களைக் கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு திரிபவன் மனிதரிற் பதராவான்; மகாபாவியுமாவான்; நரகமும் இவனைச் சுமக்க அருவருப்புக் கொள்ளும்.

(தொடரும்)

உண்மைப் போதகன்.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை 4, பக்கம் 90.)

ஊக்கி யொண்பொரு ளெட்டுணைத் தாயினு
மாக்கி நல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளின்
நீக்கி நல்லற நிற்ப நிலாவிடிற்
றேக்கு மேற்றுணைச் செல்கதி யில்லையே.

(இ-ள்.) (நற்கதியடைய விரும்புவோர் சிராவகதர்மத்[illegible]ன்ற) ஊக்கி-பொருள்தேடும்முயற்சியைச் செய்து, எள்துணைத்து ஆயினும்- எள்ளளவாவது, (சிறிதேனுமென்றபடி), ஒண்பொருள்-ஒள்ளியபொருளை, ஆக்கி-தேடி,

(அதுகொண்டு இல்லறத்தைச் செவ்வனே நடத்தி), நல்அறம்- நல்லதர்மங்களை, செய்வர்-இயற்றுவார்கள், (இதுவல்லாமல்), பொய்யாக்கொளின்-யாக்கை செல்வங்களைப் பொய்யாகக்கொண்டால், (அதாவது: அவற்றை நிலையற்றன வெனக் கருதினால்), நீக்கி-அவற்றிலுள்ளபற்றைவிலக்கி, நல்அறம்-நல்ல யதிதர்மத்தில் (அதாவது: துறவத்தில்), நிற்ப-நிற்பார்கள், (இவ்வாறு இவ்விரண்டறங்களுள் ஒன்றில்), நில்லாவிடில்-நிலைத்து நிற்காவிட்டால், (அவர்க்கு), தேக்கும்-இன்பங்களை நிறையச்செய்கின்ற, துணைச்செல்-மேற்கூறிய தர்மங்கள் துணையாகச் செல்கின்ற, மேற்கதி-மேலானகதி, (அதாவது: சுவர்க்கப்பதவியேனும் முத்திப்பதவியேனும்), இல்லை-இல்லையாம், எ-று.

.(வி-ரை.) நற்கதியடைய விரும்புவோர் சிராவக தர்மத்தினின்று (அதாவது: இல்லற தர்மத்திலிருந்தாவது) நியாயவழியிற் பொருள் தேடும் முயற்சியைச் செய்து சிறிது பொருளையாவது தேடி இல்லறத்திற் செய்யத்தக்க நல்ல தர்மங்களை இயற்றவேண்டும்; இவ்வாறு செய்தால் சுவர்க்காதி பதவிகளையேனு மடையலாம். இங்ஙனமடையும் இல்லறவின்பமும், சுவர்க்காதிபதவிகளின் இன்பமும் நிலைபற்றன வெனத்தெரிந்தால், இவற்றிலுண்டாம் பற்றினையொழித்து, துறவெய்தி நிஷ்காமியதவத்தைச் செய்தல் வேண்டும்; இதனைச் செய்யின் எப்பொழுதும் நிலைத்த இன்பமாகிய முத்திப்பேற்றை அடையலாம். இங்ஙனம் இரண்டிலொன்றைச் செய்யாவிடில் ஒரு நற்கதியு மில்லாமற்போம்; ஆதலின், இவ்விரண்டு தர்மங்களில் ஒரு தர்மத்தையேனும் செய்யவேண்டுமென்பதுஇதன் கருத்தாம்.

ஊக்குதல்—முயற்சி செய்தல். ஒண்மையென்னும் பண்படியின்மை விகுதிகெட்டு ஒண்-என நின்றது. ஒண்மை-பிரகாசம்; பொருளுக்குப் பிரகாசமாவது பரிசுத்தத் தன்மையாம்; பரிசுத்தமான பொருளாவது நல்லாற்றிலீட்டிய பொருளாம். எள் துணை-சிறுமையை விளக்கி நின்றது. ஆக்குதல்-உண்டாக்குதல்; இங்குத் தேடற்பொருளினின்றது. மூன்றாமடியிலுள்ள நல்லறம்-துறவறத்தை யுணர்த்தி நின்றது; சீவகசிந்தாமணி நாமகளிலம்பகம் 77-ஆம் செய்யுளில் 'நற்றவஞ் செய்வார்க்கிடம்' என்றதற்கு, 'வீடுபெறத் தவஞ் செய்வார்க்கு இடம்' என்று துறவின்மேலேற்றிப் பொருள் வரைந்திருத்தல் காண்க; இதிலேயே, இரண்டாவது, 'தவம்' எனவருதற்கு, 'மறுமை கருதிய இல்லறம்' என உரைகண்டிருத்தலும் ஆராயத்தக்கது. இச்செய்யுளாலும் 'இல்லறஞ் செய்வோர் சுவர்க்காதி மறுமை யின்பங்களை அடைவார்' என்பதும், துறவறஞ்செய்வோர், 'முத்தியின்பமடைவர்' ரென்பதும் உணரப்படும். நிற்ப-என்பதில், ப-பலர்பாற்படர்க்கை விகுதி. 'தேக்கும் துணைச்செல் மேற்கதி' என மாற்றுக. நற்கதியடைவோர்க்கு, அவரவர் செய்த தர்மங்களே துணைவருவனவாதலின், 'துணைச்செல்' என்பதற்கு, 'தர்மங்கள் துணையாகச் செல்லக்கூடிய' என்று பொருள் வரையப்பட்டது. துணைச்செல்-பண்புத்தொகை; மூன்றாம் வேற்றுமைத் தொகையாகக் கோடலுமொன்று; அங்ஙனங்கொள்ளுமிடத்து, 'துணையோடு அல்லது துணையால் செல்லக்கூடிய' என விரிக்கவேண்டும்.

வ-ஈ-ற்றனை. (௪௬)

(இன்னும் வரும்.)

சேம்பூர். வீ. ஆறுமுகத்சேர்வை.

விநோத கதைத்திரட்டு.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-3, பக்கம். 56.)

தாடிக்குத் தர்க்கம்பேசிய சாமியார் கதை.

பங்குனி மாசத்தில் வெயில் அதிகரித்த நடுப்பகல் நேரத்தில் ஒருநாள், முழங்கால்வரை தொங்கும் சடையையும், வயிறுவரையில் நீண்டு அடர்ந்த தாடியையும், கழுத்திலிருந்து பாதம்வரை தொங்கும் அங்கியையும் உடைய ஒரு சாமியார் ஒரு சிற்றூருக்கடுத்துக் காட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்தார்; அப்போது, சூரியவெப்பத்தால் அவர் உடம்பெங்கும் வியர்வை பெருக்கெடுத்தோடி அவர் அணிந்திருந்த, அங்கியை, நனைத்து விட்டதோடு, தாடியிலும் மழைத்துளிபோல் வடிந்து கொண்டிருந்தது; அவர் முகமோ, மிகவும் வாட்டமடைந்ததாகக் காணப்பட்டது. அப்போது, அங்கே மாடுமேய்த்துக் கொண்டிருந்த, சிறுவன் அவருடைய பரிதாபமான நிலையைப்பார்த்து இரக்கமும், சங்கடத்திற்கு ஏதுவாகிய, அவருடைய வேடத்திற்காக ஆச்சரியமும் அடைந்து "ஐயா! சாமியாரே! இந்த வெயிலால் சாதாரண மனிதர்களுக்கே உடம்பு உருகிப் போகின்றது; இவ்வளவு தாடியும் ஜடையும் வளர்த்திருக்கின்ற உமக்கு, இதனால் உண்டாகும் துன்பம் இலேசானதாகவா இருக்கும்? வீணாக ஏன் இவைகளை இப்படிவளர்த்தீர்? இவற்றால் உமக்கென்ன பிரயோஜனம்? குளிர்காலமாயிருந்தாலும், சற்று உதவியாக இருக்கும். இந்தககாலத்தில் அதிக சிரமத்தையல்லவா உண்டுபண்ணும்? குளிர்காலத்தில் வைத்திருந்தாலும், இந்தக் கொடிய வெயிற்காலத்தில், சிரைத்துவிடக் கூடாதா?" என்று நற்போதனையாகவும் பரிகாசமாகவும் சொன்னான். அதைக் கேட்டவுடன் சாமியார், "நமக்கு நல்லதுதானே சொல்லுகிறான்" என்று நினையாமல், வெயில் மிகுதியால் உண்டான சிரமத்தோடு இந்த வார்த்தைகள் மிகுந்த எரிச்சலை உண்டாக்கியபடியால் அடங்காத கோபங்கொண்டு, அந்தச் சிறுவனைப்பார்த்து, "அடே படுவா மகனே! என்னுடைய தாடியைப்பற்றி நீ ஒன்றுஞ் சொல்லவேண்டியதில்லை. நான் யாருடைய இடத்தில் வைத்திருக்கிறேன்? உன் அப்பன்விட்டு இடத்திலா வைத்திருக்கிறேன். எனக்குச் சொந்தமான இடத்திலல்லவா இந்த ஜடையையும் தாடியையும் வளர்த்து வருகிறேன்; இதைப்பற்றி உனக்கென்ன சங்கடம் நேர்ந்தது? இனிமேல் ஒன்றும் சொல்லாதே; ஏதாவது சொன்னால் பல்லை உதிர்த்து விடுவேன்" என்றுகூறினார். உடனே சிறுவன், விழுந்து விழுந்து சிரித்து, "சுவாமிகளே! அப்படியானால் இன்னும் நாலுமுழம வளர்த்துக் கொள்ளுங்கள்; யாதொரு தடையுமில்லை" என்று சொல்லி, அங்கே நின்றால் பரதேசி அடிப்பானென்று ஓடிவிட்டான்.

—————

கதாசாகரன்.

புத்தக வரவு.

பெண்கல்வி:—

இத்தலைப்பெயரமைந்த நூலொன்று தூத்துக்குடி-கனம்-மு-பெ-மாரியப்பநாடார் அவர்களால் எமது பார்வைக்கனுப்பப் பட்டிருக்கிறது. இந்நூல், ஷெ நாடாரவர்களாலேயே இயற்றப் பெற்றது. இதில், கல்வியானது மானிடர்க்கின்றியமையாச் செல்வமென்பது, குறள், நாலடியார் முதலிய அரிய பெரிய நூல்களின் அநேகம் மேற்கோட் செய்யுட்களுடன் விளக்கமாக எடுத்துக் காட்டப்பட்டிருப்பதோடு, இது ஆடவர்க்கு அத்யாவசியமானது போலப் பெண்களுக்கும் மிக உரித்தானதென்பது மிக வற்புறுத்திக் கூறப் பட்டிருக்கின்றது. இன்னும் பெண்கட்குக் கல்வி கூடாதென்னும் வகுப்பாரின் கக்ஷி அதி தீவிரமாகக் கண்டிக்கப்பட் டிருக்கிறது. மாதர்க்கின்றியமையாத பற்பல ஒழுக்கங்களும் "பெண்கள் அணிகலம்" என்ற தலைப்பின்கீழ் தெளிவாக எழுதப்பெற்றிருக்கின்றன. கல்வி கற்பதால் பெண்கள் கெட்டவழிகளிற் பிரவேசித்து விடுவார்களென்று சிலர் கூறுவார்கள். தீக்குணமோ நற்குணமோ ஸ்திரீகட்கு இயற்கையிலுண்டாவது. கல்லாதவர்களிலும் தீயருண்டு, கற்றவர்களிலு முண்டு. ஆதலின், கல்வி எவ்விதத்திலும் தீமைக்கிடங்கொடாது; நல்வழிக்கே எவரையுந் திருப்பும் ஆற்றலுடையது; நற்குண முடையார்க்கு அதனை விருத்தி செய்யும், தீக்குண முடையார்க்கு அதனையொழித்து நற்குணத்தை விருத்திசெய்யும். ஆதலின், கல்வி பெண்கட்குத் தீமைபயக்குமெனக்கூறுதல் பேதைமையென்பதே எமக்கும் துணிபு. இத்துணிபு பற்றியே கனம் நாடார் அவர்கள் இந்நூலை எழுதி வெளிப்படுத்தியதானது தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் கொண்டாடக் கூடியதாகும். உலகத்தார்க்குப் பயன்படும் நூல்களுள் இது முதன்மை பெற்றதெனச் சொல்லலாம். ஆதலின், இத்தகைய பயனுறுபனுவலைத் தமிழ்மக்கள் ஆதரித்துப் பயனடைமாறு வேண்டுகிறோம். இந்நூல் வேண்டுவோர், "மு-பெ-மாரியப்ப நாடார்; 18, தெற்குக் காட்டன்ரோடு; தூத்துக்குடி" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலை அணா இரண்டரை.

பத்திராதிபர்.

210444

உ

கடவுள் துணை.

சோதிட விளம்பரம்.

நேயர்காள் !

தங்கட்கு ஜாதகங்கள் கணிக்கவேண்டினும், அல்லது பல னெழுத வேண்டினும், ஆலயம், மனை, முதலியவைகளுக்குப் பொரு த்தபலன் எடுத்தெழுதவேண்டினும், புத்திரதோஷநிவர்த்திக்கு (கர்ம நாமப்படி) தோஷநிவர்த்தி சாந்திவிதிகள் எடுத்தெழுத வேண்டி னும், அல்லது நஷ்டஜாதகம் கணித்துப் பலனெழுத வேண்டினும், ஆரூடம பார்க்கவேண்டினும் அடியிற் குறித்த விடத்திற்கெழுதி விவரம் தெரிந்துகொள்ளலாம்.

குறிப்பு:—இதற்கு இராமநாதபுரம் ஸ்ரீமத் பாஸ்கர சேதுபதி மகாராஜாவின் அருமை மைத்துனர் ஸ்ரீமான் V. தங்கவேல் சாமி த்தேவர் அவர்களாலும் மற்றும் அனேகம் கனதன வித்வான்களா லும் (நன்கு மதிக்கப்பெற்று) நற்சாக்ஷிப் பத்திரமும் அளிக்கப்பெற் றிருக்கிறது.

உடனே எழுதி விவரந்தெரிந்து கொள்ளுங்கள்.

V. வைத்தியநாதஸ்வாமி ஸ்தபதி,
ஜோதிஷர்,
"அகஸ்தியர் சோதிடசாஸ்திர சாலைத்" தலைவர்,
திருவாரூர்,
தஞ்சாவூர் ஜில்லா

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

எது! எது!! எது!!!

இருவிழிகள் வாண்முகத்திலிருந்தாலும், கல்வியில்லாத கண் புண்ணாகு மென்பதை, "திருக்குறள்" "புறநானூறு" "கம்பராமா யணம்" முதலிய, தெய்வப்புலவர்கள், இயற்றிய பாக்களிலிருந்து மேற்கோளெடுத்து நிரூபிக்கப்பட்ட

"பெண் கல்வி"

என்ற அருமையான புத்தகம், வெளியாகி விட்டது. தனிப்புத்த கம் வேண்டுவோர், 2½ அணா ஸ்டாம்பு கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்குத் தக்க கமி ஷன் கொடுக்கப்படும். வியாபாரிகள் எமக்கு எழுதுவார்களாக.

எமது விலாசம்.
மு. பே. மாரியப்ப நாடார்
18, தெற்குக் காட்டன் ரோடு
தூத்துக்குடி.

ஸ்ரீபாலன்.

ஓர் இனிய தமிழ் நாவல்.

இஃது, ஸ்ரீபுராணத்தினின் றும் எடுத்து இனிய தமிழ் நடையில் ஆடவர், பெண்டிர், முதலியவர்கள் விரும்பி வாசிக்கத் தக்க விதமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்நாவலை வாசிப்பதால் கற்பின் மகிமை, சத புருஷர்களின் லக்ஷணம், நட்பின் உயர்வு, சிநேகத் துரோகிகள் தீங்கடைதல், வஞ்சனைக் காரர்கள் சஞ்சலப்படல், பொறுத்தார் அரசாளுதல், பொங்கினார் காடுறைதல், வேட்டகம் புகுவாருக் குண்டாம் இழிவு, முயற்சி திருவினை யாக்குதல், இன்னாரை யொறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்துவிடல் முதலிய பல அரிய நீதிகளை யெல்லாம் நன்குணரலாம். சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத் தான் புத்தகம் கிடைக்கும். இதன் விலை அணா 10.

உதயணன்.

இது, சிறு பஞ்ச காவியங்களிலொன்றாய்ச் செய்யுள் ரூபமாக இருந்த உதயண காவியத்தைத் தழுவி வசன நடையில் எழுதி வெளியிடப் பட்டிருக்கிறது; இதில் பல நீதிகள் அடங்கி யுள்ளன. இந்நூலை வாசிப்பதால் உதயண காவியத்தை ஒரு முறை பாடங்கேட்டது போலாகும்; இந்நூல் வாசிப்போர்க்கு மிக்க இன்பத்தை யளிக்கும்; ஆடவரும் பெண்டிரும் விரும்பி வாசிக்கத் தக்கது. இதில் சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத்தான் புத்தகம் கிடைக்கும். விலை அணா 8.

தருமசீலன் ஆபீஸ்
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

சுகாதார போதினி.

இது, ஒருமாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை; இதில் சுகாதாரம், வைத்தியம், மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம், கைத்தொழில் முதலிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

வருஷசந்தா ரூபா ஒன்றுதான். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்:—சுகாதார போதினி ஆபீஸ்,
12, அப்புமேஸ்திரி தெரு, ஜி, டி, மதராஸ.

தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷிலும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகு சுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிட வேண்டிய காப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜும் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப் பார்த்து முடித்துக்கொடுப்போம்.

மானேஜர்,
தருமசீலன் பிரஸ்,
1/2 பாலகிருஷ்ணன் சந்து.
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.